# (ஐ) வேலை நிலையும் தொழிலுறவுகளும்

## 1. முகவுரை

வேலை நிலையும் தொழிலுறவுகளும் பற்றிக் கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்கள், நாட்டில் தற்போதுள்ள வேலைநிலைபற்றி ஓரளவு விவரத்தையே தருகின்றன. ஒழுங்கான அடிப்படையிற் பின்வரும் தரவுகள் மட்டுமே கிடைக்கின்றன; தொழிலிணைப்பு நிலையங்களினால் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கைகள், வேலை அல்லது வேலைநாடித் தொழிலிணைப்பு நிலையங்களிற் பதிவு செய்தோரின் எண்ணிக்கைகள் என்பனவாகும். இவ்வெண்தொகைகளுக்குத் துணையாக, அரசாங்கத் துறையின் வேலைநிலை பற்றி மத்திய வங்கியினால் ஆண்டளவீடொன்று மேற்கொள்ளப்பட்டது. மேலும் மத்திய வங்கியானது ஊ. சே. நி. திணைக்களப் பதிவுகளிலிருந்த ஊழியர் சேமநிதியின்[1] கீழ் பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள் பற்றிய தகவல்களையும் பெறுகின்றது. அண்மையிற் கிடைக்கப்பெற்ற எண்தொகைகள் 1968ஆம் ஆண்டிற்குரியனவாகும்.

அரசாங்கத் துறையின் வேலைநிலைபற்றி மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட ஆண்டளவீட்டின்படி அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்கச் சார்புடைய நிறுவனங்கள் என்பனவற்றிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை முறையே 2.8 சதவீதத்தாலும், 8.3 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது.

1967ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1968ஆம் ஆண்டில் ஊ. சே. நி இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 5.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. எனினும், 1965-1968 காலப் பகுதிக்கான ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் 6.8 சதவீதமாகும்.

## 2. வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை

1960 தொடக்கம் 1970 வரை தொழிலிணைப்பு நிலையங்களினால் வேலையிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய ஆண்டு எண்தொகைகள் கீழே அட்டவணை II (ஐ) 1 இலே கொடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை II (ஐ) 1

**தொழிலில் அமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கையும் ஒவ்வொரு பகுப்பிலும் பதிவு செய்யப்பட்டோரின் மொத்தத் தொகையில் அவர்களின் தொடர்பான முக்கியத்துவமும்**

| ஆண்டு | தொழில்நுட்ப, எழுதுவினைஞர் | | தேர்ச்சிபெற்றோர் | | ஓரளவு-தேர்ச்சி பெற்றோர் | | தேர்ச்சிபெறுதோர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின சத வீதம் |
| 1960 | 1,400 | 5.3 | 771 | 4 6 | 1,247 | 3.6 | 4,744 | 6.5 | 8 162 | 5.4 |
| 1961 | 1,259 | 4.6 | 631 | 3.5 | 964 | 2.8 | 2,794 | 3.9 | 5,648 | 3.7 |
| 1962 | 1,263 | 3.7 | 468 | 2.7 | 809 | 2.3 | 2,315 | 3.5 | 4,857 | 3.2 |
| 1963 | 1,322 | 3.7 | 502 | 3.0 | 836 | 2.3 | 2,466 | 3.9 | 5,129 | 3.4 |
| 1964 | 1,722 | 4.4 | 535 | 3.2 | 945 | 2.5 | 3,599 | 5.5 | 6,801 | 4.3 |
| 1965 | 1,495 | 2.7 | 846 | 4.2 | 1,035 | 2.1 | 3,753 | 5.0 | 7,129 | 3.6 |
| 1966 | 1,056 | 1 6 | 740 | 3.4 | 917 | 1.5 | 4,089 | 4.5 | 6.802 | 2.9 |
| 1967 | 1,018 | 1.4 | 588 | 2.5 | 712 | 1.1 | 1,936 | 2.1 | 4,254 | 1.7 |
| 1968 | 680 | 0.9 | 780 | 3.1 | 794 | 1.1 | 2,696 | 2.6 | 4,950 | 1.8 |
| 1969 | 865 | 1.0 | 710 | 2.3 | 800 | 0.9 | 2,908 | 2.1 | 5,283 | 1.5 |
| 1970* | 526 | 0.5 | 584 | 1.5 | 428 | 0.4 | 1,287 | 0.7 | 2,825 | 0.7 |

மூலம்: தொழிற்றிணைக்களம்.

* தற்காலிகமானவை.

1. ஊ. சே. நி. கண்காணிப்பாளருக்கு ''உள்ளடக்கப்பட்ட'' தொழில்களால் செய்தனுப்பப்பட்ட விவர அறிக்கை. ''உள்ளடக்கப்பட்ட'' தொழில்கள் என்பது தற்போது 5 அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை வேலைக்கமர்த்திய பெருந்தோட்டங்களையும், 3 அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை வேலைக்கமர்த்திய தோட்டங்கள் தவிர்ந்த ஏனைய தாபனங்களையும் உள்ளடக்கும். எனினும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமநிதிக்கு உதவுதொகைகளை வழங்கும் ஊழியர்கள் இதிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தொழிலிணைப்பு நிலையங்களினூல் வேலையிலமர்த்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1970இல் 5,283 இலிருந்து 1970இல் 2,825 உக்குக் குறைவுற்றது. 1970இல் தேர்ச்சியற்ற தொகுதியிலேற்பட்ட குறைவு 55 சதவீதத்திற்கும் அதிகமாகும். ஓரளவு தேர்ச்சியும் தொழில் நுட்ப எழுதுவினைஞர் ஆகிய தொகுதிகளிலேற்பட்ட குறைவு முறையே 47 சதவீதமும் 39 சதவீதமாகும்.

### 3. அரசாங்கத் துறையில் வேலைநிலை

அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்கச்சார்புடைய நிறுவனங்கள் (பொதுக்கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், சபைகள் முதலியன) வேலைநிலைபற்றி மத்திய வங்கி ஆண்டளவீடு நடாத்துகின்றது. 1969இல் 96 அரசாங்கத் திணைக்களங்களும் 55 அரசாங்கச்சார்புடைய நிறுவனங்களும் இவ்விசாரணைக்கு ஒத்துழைப்பு நல்கின. 1970இல் 107 அரசாங்கத் திணைக்களங்களும் 65 அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களும் மத்திய வங்கியினூல் வேண்டப்பட்ட தரவுகளைத் தந்தன. ஒத்துழைப்புத் தராத அரசாங்கத் திணைக்களங்களுக்கான எண்தொகைகள் 1969/70 இற்கான அரசாங்க வருமானமும் செலவும் பற்றிய மதிப்பீடுகளிலிருந்து இயன்றளவு பெறப்பட்டன.

அரசாங்கத் துறையில் உள்ள ஊழியர்கள் பதவி நிலைகளில் அடிப்படையில் (அதாவது நிரந்தர, தற்காலிக, அமய அடிப்படையில்) பின்வரும் தொழில்முறையான பாகுபாட்டின் கீழ் வகுக்கப்பட்டுள்ளனர்.

(i) உயர்பதவி அலுவலர் தரத்திலுள்ள நிருவாக, தொழில்நுட்ப பயில்தொழில் அலுவலர்கள்.
(ii) கீழமைந்த ஊழியர்கள்
(iii) சிற்றூழியர்கள்
(iv) ஏனையோர்

### (அ) அரசாங்கத் திணைக்களங்கள்

1969ஆம் 1970ஆம் ஆண்டுகளுக்கான அரசாங்கத் திணைக்களங்களின் வேலைநிலைபற்றிய மதிப்பீடுகள் கீழே அட்டவணை II(ஐ) 2இலே கொடுக்கப்பட்டுள்ளன.

கவனத்திற்கெடுக்கப்பட்ட ஈராண்டுகளிலும் அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள மொத்த ஊழியர்களில் 91 சதவீதமானோர் கீழமைந்த ஊழியர், சிற்றூழியர் தரங்களில் இருந்தனர். 1970இல் வேலையிலிருந்தோரின் மொத்த எண்ணிக்கையில் கீழமைந்த ஊழியர்கள் 37 சதவீதமாகவிருக்கையில் சிற்றூழியர்கள் 54 சதவீதமாகவிருந்தனர். முன்னைய ஆண்டுகளில் இவ்விரு பிரிவுகளின் தொடர்பான சதவீதப் பங்கு இதே அளவாகவிருந்தது. 1969இலும் 1970இலும் அரசாங்கத் திணைக்களங்களில் வேலையிலமர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கையில், 4 சதவீதமானோர் நிருவாக தொழில் நுட்ப, பயில்தொழில் தரங்களிலிருந்தனர்.

அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள ஊழியர்களில் பெரும்பாலானோர் நிரந்தரமான பிரிவைச் சார்ந்தவர்களாகவிருந்தனர் என்பதனை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது.

1970இல் அரசாங்கத் திணைக்களங்களிலிருந்த எல்லா ஊழியர்களிலும் 79 சதவீதமானோர் நிரந்தர அடிப்படையில் வேலையிலிருந்தனர். 1969இலும் 79 வீதமுமாகவே இத்தொகை இருந்தது. ஈராண்டுகளிலும் ஏறக்குறைய 6 சதவீத

## அட்டவணை II (ஐ) 2

### வேலைநிலைபற்றிய புள்ளிவிவரங்கள் — அரசாங்கத் திணைக்களங்கள்*

| தொழிற்பகுப்பு | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கைடம் | | | | | | | | 1969ஐ விட சத வீதமாக மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரமான | | தற்காலிகமான | | அமைய | | மொத்தம் | | |
| | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | |
| 1. உயர்பதவியிலுள்ள நிருவாக, தொழில் நுட்ப, பயில் தொழில் அலுவலர்கள் ... | 8,240 | 8,800 | 347 | 483 | 4 | 6 | 8,591 | 9,289 | + 8.1 |
| 2. கீழமைந்த ஊழியர்கள் | 77,512 | 79,674 | 1,580 | 1,724 | 1,056 | 1,453 | 80,148 | 82,851 | + 3.4 |
| 3. சிறுசேவை ஊழியர் ... | 76,567 | 78,127 | 10,516 | 9,844 | 30,644 | 32,387 | 117,727 | 120,358 | + 2.2 |
| 4. ஏனையோர் ... | 11,265 | 11,465 | 399 | 365 | 485 | 489 | 12,149 | 12,319 | + 1.4 |
| **மொத்தம் ...** | **173,584** | **178,066** | **12,842** | **12,416** | **32,189** | **34,335** | **218,615** | **224,817** | **+ 2.8** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு:

1. i. சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிருவாகிகளும்.
   ii. முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
   iii. விஞ்ஞானிகள், தொழில் நுட்பலாளர்களும், பொறியியலாளர்களும், வைத்தியர்கள், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், கணக்காளர்கள், மதிப்பாளர்களும்.
2. i. எழுதுவினைஞர் தரங்கள், காசாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சைபர் இயந்திர இயக்குநர்கள்.
   ii. தொலைபன்னி அலுலவர்கள், அலுவலக எந்திர இயக்குநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், நீடிப்புப் பரிசோதகர்களும், விசாரணை அலுவலர்களும், நகர காவலர்கள், கிராம சேவையாளர்களும்.
   iii. களஞ்சியக் காப்பாளர்.
3. i. தூதர்கள், அலுவலக சிறுசேவை ஊழியர்கள், கண்காணிகள் சாரதிகள், மோட்டார் வாகனங்கள், லொறிகள் முதலியன) பயிறசிபெருத வேலையாட்கள், ஓரளவு பயிற்சி பெற்ற வேலையாட்கள்.
   ii. பயிற்சிபெற்ற வேலையாட்கள்.

மான ஊழியர்கள் தற்காலிக தரத்திலிருந்தனர். மொத்த வேலையில் அமயத் தரத்திலுள்ளவர்களின் தொடர்பான பங்கு 1969உடன் ஒப்பிடுகையில் 1970இல் சிறிதளவு அதிகரித்தது. இது பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களிலும் அமய அடிப்படையில் அமர்த்தப்பட்ட சிற்றூழியர்களின் எண்ணிக்கையிலேற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் விளைவாகும்.

1970இல் அரசாங்கத் திணைக்களங்களிலிருந்த ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 2.8 சதவீதத்தால் அதிகரித்தது. மிக வேகமான வளர்ச்சி வீதம் நிருவாக, தொழில்நுட்ப, உயர் தொழில் ஆகிய தரங்களிற் காணப்பட்டது. இப்பிரிவில் 1970இல் ஊழியர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 8 சதவீதத்தால் அதிகரித்தது. கீழமைந்த ஊழியர்களையும், சிற்றூழியர்களையும் பொறுத்தவரையில் வேலையிலிருந்தவர்களின் மொத்தத் தொகையிலேற்பட்ட அதிகரிப்பு முறையே 3.4 வீதமாகவும் 2.2 வீதமாகவும் இருந்தது.

### (ஆ) அரசாங்கச் சார்புள்ள நிறுவனங்கள்

அரசாங்கச் சார்பு நிறுவனங்களின் வேலைநிலைபற்றிய மதிப்பீடுகள் கீழேயுள்ள அட்டவணை II (ஐ) 3இலே கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை II (ஐ) 3

### தொழில்நிலையப் புள்ளிவிவரங்கள் — அரசாங்கச் சார்புள்ள நிலையங்கள்*

| தொழிற்பகுப்பு | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1969ஐ விட சத வீதமாக மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரம் | | தற்காலிகம் | | அமய | | மொத்தம் | | |
| | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | 1969 | 1970 | |
| 1. நிருவாக, தொழில் நுட்ப, பயில் தொழில் அலுவலர்கள் ... | 5,212 | 5,793 | 301 | 305 | 47 | 46 | 5,560 | 6,144 | + 10.5 |
| 2. கீழமைந்த ஊழியர்கள் | 26,911 | 29,175 | 357 | 764 | 410 | 433 | 27,678 | 30,372 | + 9.7 |
| 3. சிறுசேவை ஊழியர்கள் | 77,570 | 82,568 | 7,244 | 9,125 | 25,982 | 27,767 | 110,796 | 11,9460 | + 7.8 |
| 4. ஏனையோர் ... | 5,860 | 6,691 | 200 | 228 | 3,832 | 3,850 | 9,892 | 10,769 | + 8.9 |
| மொத்தம் ... | **115,553** | **124,227** | **8,102** | **10,422** | **30,271** | **32,096** | **153,926** | **166,745** | + **8.3** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு:

1. i. சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிருவாகிகளும்.
   ii. முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
   iii. விஞ்ஞானிகள், தொழில் நுட்பலாளர்களும், பொறியியலாளர்களும், வைத்தியர்கள், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், கணக்காளர்களும், மதிப்பாளர்களும்.
2. i. எழுதுவினைஞர் தரங்கள், இயந்திர இயக்குநர்கள் காசாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் தட்டெழுத்தாளர்கள், சைபர்.
   ii. தொலைபன்னி அலுவலர்கள், அலுவலக எந்திர இயக்குநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், நீடிப்புப் பரிசோதகர்களும் விசாரணை அலுவலர்களும், நகர்க்காவலர்கள், கிராமசேவையாளர்கள்.
   iii. களஞ்சியக் காப்பாளர்கள்.
3. i. தூதர்கள், அலுவலக சிறுசேவை ஊழியர்கள், ஏவலாளர்கள், சாரதிகள் (மோட்டார் வாகனங்கள் லொறிகள் முதலியன) பயிற்சிபெறாத வேலையாட்கள், ஓரளவு பயிற்சிபெற்ற வேலையாட்கள்
   ii. பயிற்சிபெற்ற வேலையாட்கள்.

* அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், சபைகள் ஏனையவை.

*1970இல் அரசாங்கச் சார்புள்ள நிறுவனங்கள் வேலை நிலையமைப்பு 1969இல் இருந்ததனைப் பெரும்பாலும் ஒத்திருந்தது. வேலையிலிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் கீழமைந்த சிற்றூழியர் தரத்தினர்கள் 90 சதவீதமாகும். அரசாங்கச் சார்புள்ள நிறுவனங்களில் ஊழியர்களில் ஆதிக்கம் செலுத்தியோர் சிற்றூழியர்களாவர். இந்நிலையங்களில் வேலையிலிருந்தோரில் ஏறக்குறைய 72 சதவீதமானோர் சிற்றூழியர் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். பெரும்பாலான அரசாங்கச் சார்புடைய நிறுவனங்கள் கைத்தொழில் முயற்சிகளைச் சார்ந்தனவாக இருப்பதனால் அவை தேர்ச்சி பெற்றதும், தேர்ச்சி பெறாததுமான தொழிலாளர்களைப் பெருமளவில் வேலையிலமர்த்துகின்றமை இதற்குக் காரணமாகும். 1969இலும் 1970இலும் நிருவாக, தொழில் நுட்ப, உயர்தரங்களில் உள்ளவர்கள் எல்லா ஊழியர்களிலும், 4 சதவீதத்தினராக விருந்தனர்.*

*1970இல் அரசாங்கச் சார்பு நிறுவனங்களின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 1969இனதைவிட 8.3 சதவீதத்தால் உயர்வுற்றிருந்தது. பல்வேறு தொழில் முறையான பிரிவுகளின் வளர்ச்சி வீதங்கள் ஏறக்குறைய ஒத்திருந்தன. எனினும், நிருவாக தொழில் நுட்ப, உயர்நிலையில் உள்ளோரின்*

தொகை ஏனையவற்றைவிட சிறிதளவு வேகமாக (10 5 சதவீதம்) வளர்ச்சியுற்றது. முழு நியதிகளில் அமர்த்தப்பட்டோரின் மிகக் கூடிய அதிகரிப்பு சிற்றூழியர் தரத்திலே காணப்பட்டது.

### 4. ஊழியர் சேமநிதியின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள்

ஊ. சே நி. இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை பற்றி அண்மையில் கிடைக்கக்கூடிய எண்தொகைகள் 1968ஆம் ஆண்டிற்குரியதாகும். ஊ. சே. நி. இன் கீழ்ப்பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் முக்கியமாக கைத்தொழில் பகுப்புகளுக்கு ஏற்பப் பகுக்கப்பட்டுள்ளார்கள். கீழே தரப்பட்டுள்ள எண்தொகைகள் 1965–68 ஆம் ஆண்டுகளையொட்டியதாகும்.

**அட்டவணை II (ஐ) 4**

**ஊ. சே நி. இன் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களது தொகை**

| | ஆண்டு முடிவில் பதிவுசெய்யப்பட்ட தொகை | | | |
|---|---|---|---|---|
| | 1965 | 1966 | 1967 | 1968 |
| 1. ஏற்றுமதி விவசாயம் ... | 1,072,892 | 1,126,829 | 1,191,585 | 1,246,138 |
| 2. ஏனைய விவசாயம் ... | 1,973 | 3,355 | 3,734 | 4,743 |
| 3. சுரங்கத் தொழிலும் பார்குழித் தொழிலும் | 1,528 | 2,443 | 2,903 | 2,968 |
| 4. தயாரிப்புத் தொழில் ... | 111,168 | 143,520 | 160,832 | 174,187 |
| 5. கட்டட ஆக்கம் ... | 15,111 | 17,026 | 18,929 | 24,890 |
| 6. வர்த்தகமும் போக்குவரவும் ... | 135,174 | 148,787 | 163,574 | 176,502 |
| 7. சேவைகள் ... | 76,484 | 83,429 | 92,458 | 99,452 |
| 8. பகுக்கப்படாதவை* ... | 15,735 | 17,762 | 18,930 | 11,388 |
| மொத்தம் ... | **1,430,065** | **1,543,151** | **1,652,952** | **1,740,268** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* பிழைகளையும், தவறுகளும் உள்ளடங்கும்

**குறிப்பு:** எண்தொகைகள் பெருமளவு தற்காலிகமானவை

(i) இவை தொழிலைவிட்டு நீங்கியும் ஊ.சே.நி. உடன் வரவு நிலுவைகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கும், ஊழியர்களையும் உள்ளடக்கும்.

(ii) இவை அங்கீகரிக்கப்பட்ட சேமநிதிகளை வைத்திருக்கும் வர்த்தகங்களிலுள்ள தொழில்களை உள்ளடக்க மாட்டா.

(iii) தற்போது வேறு தகவல்கள் இன்மையால், கைத்தொழிலின்படியான இப்பகுப்பு, தாபனத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டதாகும் அநேக சமயங்களில் இத்தாபனங்கள் தங்கள் கைத்தொழிலின் தன்மையைக் காட்டவில்லை. எனவே இது திருத்தமற்ற பகுப்பாகும்.

1968இன் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் 72 சதவீதம் விவசாயத்திலும், 10 சதவீதம் தயாரிப்பிலும், 10 சதவீதம் வர்த்தகத்திலும் போக்குவரத்திலும் காணப்பட்டது. 1997இன் இறுதியில் ஊ. சே. நி. இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் பரம்பலில் பொதுவான அமைப்பு இதை ஒத்திருந்தது.

1967 உடன் ஒப்பிடுகையில் ஊ. சே. நி. இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1968இல் 5.3 சதவீதத்தால் அதிகரித்தது, முன்னைய இரண்டு ஆண்டுகளிற் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கைகளின் அதிகரிப்பு (1965இலும் பார்க்க 1966இல்) 7.9 சதவீதமும் , (1966இலும் பார்க்க

## அட்டவணை II (ஐ) 5

### மாவட்டங்கள்படியும், கைத்தொழில்கள்படியும் ஊ. சே. நி. இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் தொழில்நிலை எண்ணிக்கை

ஆண்டு முடிவுக்குரிய எண்தொகைகள்.

| கைத்தொழில் \ மாவட்டம் | கொழும்பு | கேகாலை | மாத்தறை | இரத்தினபுரி | கண்டி | நுவரெலியா | களுத்துறை | யாழ்ப்பாணம் | புத்தளமும் சிலாபமும் | குருணகல் | பதுளை | காலி | வவுனியா | மாத்தளை | அநுராதபுரம் | அம்பாந்தோட்டை | திருகோணமலை | மட்டக்களப்பு | பொலன்னறுவை | மன்னார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ஏற்றுமதி விவசாயம் | 26,329 | 98,717 | 90,694 | 174,434 | 266,929 | 159,260 | 76,152 | 229 | 15,232 | 36,812 | 162,583 | 94,539 | — | 43,592 | — | — | 113 | 523 | — | — | 1,246,138 |
| 2. ஏனைய விவசாயம் | 1,472 | 28 | 52 | 55 | — | 5 | — | 83 | 8 | — | 201 | 1,773 | 52 | — | 239 | 602 | — | 114 | 19 | 10 | 4,743 |
| 3. சுரங்கத் தொழிலும், பார்க்குழித்தொழிலும் | 2,255 | — | — | — | — | — | 54 | — | — | 616 | — | — | — | 43 | — | — | — | — | — | — | 2,968 |
| 4. தயாரிப்புத் தொழில் | 125,622 | 1,114 | 2,163 | 640 | 5,433 | 405 | 212 | 3,456 | 12,386 | 10,101 | 1,689 | 5,906 | 98 | 2,107 | 458 | 372 | 456 | 857 | 585 | 127 | 174,187 |
| 5. கட்டட ஆக்கம் ... | 12,315 | 266 | 69 | 309 | 3,466 | 226 | 5,264 | 237 | 39 | 292 | 1,201 | 306 | 20 | 216 | 19 | — | 116 | 71 | 466 | 12 | 24,890 |
| 6. வர்த்தகமும், போக்குவரத்தும் ... | 108,845 | 4,389 | 1,838 | 4,211 | 11,996 | 5,136 | 3,991 | 4,264 | 2,946 | 6,370 | 7,682 | 1,627 | 701 | 1,671 | 1,669 | 1,022 | 3,365 | 2,812 | 1,500 | 467 | 176,502 |
| 7. சேவைகள் ... | 55,060 | 1,508 | 2,405 | 2,123 | 6,368 | 1,271 | 2,414 | 2,208 | 826 | 2,381 | 2,968 | 10,097 | 263 | 1,713 | 1,254 | 582 | 3,287 | 2,226 | 348 | 150 | 99,452 |
| 8. பகுக்கப்படாதவை* .. | 7,285 | 795 | 4,656 | 1,648 | 31 | 2,383 | 1,415 | 1,321 | 58 | 1,430 | −10,433 | 1,440 | − 25 | −720 | 50 | − 10 | − 12 | − 404 | 10 | 470 | 11,388 |
| மொத்தம் ... | 339 183 | 106,817 | 101,877 | 183,420 | 294,223 | 168,686 | 89,502 | 11,798 | 31,495 | 58,002 | 165,891 | 115,688 | 1,109 | 48,622 | 3,689 | 2,568 | 7,325 | 6,229 | 2,908 | 1,236 | 1,740,268 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* பிழைகளும் தவறுகளும் உள்ளடங்கும்

குறிப்பு: எண்தொகைகள் பெரும்பாலும் தற்காலிகமானவை

i. இவை தொழிலைவிட்டு நீங்கியும், ஊ. சே. நி. உடன் வரவு நிலுவைகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கும் ஊழியர்களையும் உள்ளடக்கும்

ii. இவை அங்கீகரிக்கப்பட்ட சேமநிதிகளை வைத்திருக்கும் வர்த்தகங்களிலுள்ளதொழில்களை உள்ளடக்க மாட்டா.

iii. தற்போது வேறு தகவல்கள் இல்லாமையால் கைத்தொழிலின்படியான இப்பகுப்பு தாபனத்தின் பெயரினால் காட்டப்பட்டுள்ள தொழில்கொள்வோரின் கைத்தொழிற்றன்மையை அடிப்படையாகக் கொண்டது. அநேக சமயங்களில் இத்தாபனங்கள் தங்களின் கைத்தொழிலின் தன்மையைக் காட்டவில்லை. எனவே இது திருத்தமற்றபகுப்பாகும்.

1967இல்) 7.1 சதவீதமுமாகும். 1965-1968 காலப் பகுதிக்கான ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் 6.8 சதவீதமாகும், 1968இல் பெருமளவிலான அதிகரிப்பு ஏனைய விவசாயத்திலும் (27 சதவீதம்) கட்டடவாக்கத்திலும் (32 சதவீதம்) ஆகும். குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் தயாரிப்பு (8.3 சதவீதம்), சேவைகள் (7.6 சதவீதம்) என்பவற்றிற் காணப்பட்டன.

1968இல் முடிவிலுள்ளபடி ஊ. சே. நி. இன் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் பரம்பலை கைத்தொழில், மாவட்டம் ஆகியவற்றின்படி கீழே அட்டவணை II (ஐ) 5 கொடுக்கின்றது

1968இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களில் 19 சதவீதம் கொழும்பு மாவட்டத்திலுள்ள வர்த்தகத்திலும், 17 சதவீதம் கண்டியிலும் 11 சதவீதம் இரத்தினபுரியிலும் 10 சதவீதம் நுவரெலியாவிலும் 10 சதவீதம் பதுளையிலும் 7 சதவீதம் காலியிலும் 6 சதவீதம் கேகாலையிலும் இருந்தது. 1967 உடன் ஒப்பிடுகையில் 1968இலும் பரம்பல் அமைப்பு ஒத்தாகத் தொடர்ந்திருந்தது. எதிர்பார்த்தவண்ணம் கொழும்பு மாவட்டத்திற் பெரும்பாலான ஊழியர்கள் முக்கியமாகத் தயாரிப்புத் தொழில் (37 சதவீதம்), வர்த்தகமும் போக்குவரத்தும் (32சதவீதம்), பணிகள் (16 சதவீதம்) என்பனவற்றில் ஈடுபட்டிருந்தனர். குறிப்பிடப்பட்ட ஏனைய மாவட்டங்களிலுள்ள பெரும்பாலான ஊழியர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களாவர். கட்டடவாக்கம், வர்த்தகமும், போக்குவரத்தும், பணிகள் ஊழியர்களின் பரம்பலமைப்புப் பெரும்பாலான மாவட்டங்களில் ஒத்திருப்பதையும் அட்டவணையிலிருந்து அறியலாம்.

### 5. வேலை நாடிப் பதிவுசெய்தோர்

வேலை அல்லது உயர்ந்த வேலை நாடிப் பதிவுசெய்தோரின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிறுதியில் 3,41,286 உடன் ஒப்பிடுகையில் 1970 நவெம்பர் இறுதியில் 4,10,746 ஆகும். 1970இல் தொழில்நுட்ப, எழுதுவினைஞர் வேலைகளுக்காகப் பதிவுசெய்தோரின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 10,000 கொண்ட அதிகரிப்புக்கு மாறாக 13,300ஆல் அதிகரித்தது. 1970இல் தேர்ச்சி பெற்ற பகுப்பில் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கை ஏறக்குறைய 6,700 ஆகும்;

**அட்டவணை II (ஐ) 6**

**நாட்டின் தொழிலிணைப்பு நிலையங்களின் பதிவேடுகளின்படி தொழில் அல்லது நல்ல தொழில் நாடிப் பதிவு செய்தோரின் எண்ணிக்கை**

| | | கால முடிவுக்குரிய எண்தொகைகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தொழில் நுட்ப, எழுது வினைஞர்கள் | தேர்ச்சிபெற்ற | ஓரளவு தேர்ச்சி பெற்ற | தேர்ச்சி பெறாத | மொத்தம் |
| 1969 | மார்ச்சு | 77,647 | 26,361 | 73,562 | 109,235 | 286,805 |
| | யூன் | 78,522 | 26,891 | 76,110 | 115,696 | 297,219 |
| | செத்தெம்பர் | 84,066 | 29,957 | 84,370 | 131,644 | 330,037 |
| | திசெம்பர் | 85,814 | 31,147 | 86,492 | 137,833 | 341,286 |
| 1970 | மார்ச்சு | 88,824 | 33,057 | 91,743 | 147,903 | 361,527 |
| | யூன் | 92,597 | 34,018 | 96,619 | 157,051 | 380,285 |
| | செத்தெம்பர் | 95,859 | 35,333 | 93,363 | 162,838 | 387,393 |
| | திசெம்பர்* | 99,111 | 37,882 | 96,891 | 176,862 | 410,746 |

மூலம்: தொழிற்றிணைக்களம்

* தற்காலிகமானவை.

இது 1969இனதைவிட ஏறக்குறைய மூன்று மடங்காகும். 1968இலும், 1970 இலும் தேர்ச்சியில்லாத வேலைக்காகப் பதிவுசெய்தோரின் எண்ணிக்கை ஏறக்குறைய முறையே 33,400, 39,000 ஆகும்.

1970இல் வேலைநாடிப் பதிவுசெய்தோரின் மொத்த எண்ணிக்கையில் 67 சதவீதம் ஓரளவு தேர்ச்சிபெற்ற அல்லது தேர்ச்சிபெற்ற தொழில்களுக்குரியதாகும் என்பதனை அட்டவணை II (ஐ) 6 காட்டுகின்றது. தொழில்நுட்ப, எழுதுவினைஞர் வேலைகளுக்காகப் பதிவுசெய்தோரின் வீதாசாரமும் அதிகமானதாகும். 1970இல் பதிவுசெய்தோரின் 24 சதவீதம் தொழில்நுட்ப எழுதுவினைஞர் பகுப்புக்குரியதாகும். 1969இற்குரிய தொடர்பான எண்தொகை 27 சதவீதமாகும்.

## 6. தொழில் உறவுகள்

தனியார் துறை வர்த்தகங்களில் ஏற்பட்ட வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை, அதிலீடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை, அவ்வேலை நிறுத்தங்களினால் இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்களின் எண்ணிக்கை என்பன பற்றிய தரவுகளைத் தொழிற்றிணைக்களம் வழங்குகின்றது. தொழிற்றிணைக்களத்திலிருந்து பெறப்பட்ட 1970ஆம் ஆண்டுக்கான தகவல்கள் அட்டவணை II (ஐ) 7இல் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை II (ஐ) 7

**தனியார் வர்த்தகத் துறையில் வேலைநிறுத்த நிலை**

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனைய தொழில் | | |
|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள் வேலை நாட்கள் | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள் வேலை நாட்கள் |
| 1960 ... | 123 | 42,528 | 259,948 | 37 | 4,839 | 15,139 |
| 1961 ... | 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170.372 |
| 1962 ... | 138 | 42,569 | 193,792 | 550 | 25,730 | 801,882 |
| 1963 ... | 174 | 62,511 | 359,905 | 58 | 21,819 | 479,678 |
| 1964 ... | 201 | 68,009 | 611,060 | 103 | 21,400 | 274,623 |
| 1965 ... | 175 | 70,929 | 482,259 | 55 | 10,085 | 89,952 |
| 1966 ... | 132 | 138,259 | 4,117,264 | 32 | 4,592 | 34,351 |
| 1967 ... | 194 | 74,968 | 414,636 | 36 | 14,883 | 284,709 |
| 1968 ... | 171 | 65,909 | 722,690 | 26 | 11,308 | 265,726 |
| 1969 ... | 146 | 56,861 | 406,150 | 43 | 6,317 | 58,015 |
| 1970* ... | 217 | 77,598 | 841,597 | 52 | 8,976 | 108,071 |

மூலம்: தொழிற்றிணைக்களம்

* தற்காலிகமானவை.

1969இன் பெருந்தோட்டத்துறையிலேற்பட்ட வேலை நிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கை 146 ஆகும். 1970இல் இத்துறையில் 217 வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. இவ்வேலை நிறுத்தங்களிலீடுபட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் 1969இல் 56,800 இலிருந்து 1970இல் 77,600 உக்கு அதிகரித்தது. ''ஏனைய தொழில்களை''ப் பொறுத்தவரை 1970இல் முந்திய ஆண்டைவிட ஒன்பது கூடிய வேலை நிறுத்தங்களே ஏற்பட்டன.

வேலை நிறுத்தங்களில் பங்குகொண்டோரின் தொகையை நோக்கும்போது, முக்கியமான வேலை நிறுத்தங்கள் 1970இன் முதலரைப்பகுதியிலேற்பட்டன.